Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 24 வெள்ளிக்கிழமை (09-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 248

# உணவுப் பொருள் எடுத்துவர இருந்த கட்டுப்பாடுகள் நீக்கம்!

## சில பொருள்களுக்கே "பெர்மிட்" தேவை

கொழும்பு, ஆகஸ்ட் 9

வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு, விதித்திருந்த கட்டுப்பாடுகளை நேற்று முதல் நீக்கிக் கொள்வதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கிறது.

அரசாங்கத்தின் நேற்றைய அறிவிப்பின் பிரகாரம் -

★ உணவுப் பொருள்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு இனிமேல் "பெர்மிட்" பெறவேண்டும் என்ற நிபந்தனை இருக்காது.

★ பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு சில பொருள்களுக்கு மட்டும் கட்டுப்பாடு விதிக்கப்படும். அவ்வாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்வதற்கு மட்டும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் இருந்து "பெர்மிட்" பெறவேண்டும்.

★ பாதுகாப்புக் கருதிப் படையினரால் தடுக்கப்பட்ட பாதைகள் ஊடாகவும், "பெர்மிட்" பெற்றுப் பொருள்களைக் கொண்டு வரலாம்.

உணவுப் பொருள் கொண்டு செல்லக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது குறித்து, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. கிறிஸ்டி சில்வா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்

[ 3 ஆம் பக்கம் பார்க்க]

## அரிசி, மா, சீனி போன்றவை கப்பலில் வந்துள்ளன

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'குமண' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று துரிதமாக மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் மாலை வந்து சேர்ந்த இந்தக் கப்பலில் இருந்து அரிசி, மா, சீனி போன்றவற்றை இறக்கும் வேலைகள் நேற்று நடைபெற்றன.

இறக்கப்படும் பொருள்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் உடனுக்குடன் எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ஓ-3)

## ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை நடக்குமா, இல்லையா?

### விவரம் அறிவிக்கக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையை நடத்துவதா, இல்லையா என்பது குறித்து உடன் அறிவிக்குமாறு பரீட்சை ஆணையாளரை பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

பரீட்சைக்குத் தயார் செய்துள்ள மாணவர்களின் மனோநிலை பாதிக்கப்படுவதாலும்- பரீட்சையை மேற்பார்வை செய்யும் பரீட்சகர்களின் லீவுகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாலும் —

பெற்றோர்கள் பரீட்சையை நடத்தும்படி நெருக்கடி தருவதாலும் — உடனடியாக பரீட்சை தொடர்பான அறிவுறுத்தலை வெளியிடுமாறு நேற்று அவர் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிய அவசர செய்தியில் கோரியுள்ளார். (ஓ-3)

## வீடு பார்க்கச் சென்ற 20 பேர் படையினரிடம் பிடிபட்டனர்?

### வெற்றிலைக்கேணி - உடுத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 9

வெற்றிலைக்கேணி - உடுத்துறைப் பகுதியில் தங்களது வீடுகளைப் பார்க்கச்சென்ற சுமார் இருபது பொதுமக்கள் படையினரிடம் சிக்கிக் கொண்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அப்பகுதியில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி காயங்களுடன் தப்பி வந்த ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

வெற்றிலைக்கேணியில் தரித்திருக்கும் படையினர் உடுத்துறை – கொடுக்கிளாய் வரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும்— இதனை அறியாத பொது மக்கள் சிலர் தமது வீடுகளைப் பார்க்க நேற்றுக் காலையில் அப்பகுதிக்குச் சென்ற சமயம் படையினரிடம் சிக்கிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கணேசகுமார் [வயது 23] என்பவர் படையினரின் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

தாம் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம், எதிர்பாராதவிதமாக கொடுக்கிளாய்ப் பகுதி வீதியில் படுத்திருந்த இராணுவத்தினர் தன்னை நிற்கும்படி சத்தமிட்டு துப்பாக்கியால் சுட்டதாகவும்—

காயமுற்ற தான் பீதியால் சைக்கிளைப் போட்டுவிட்டு,

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஆக. 9

தந்தையர்க்குப் பிதுர்க்கடன் செய்யும் விசேட அமாவாசை தினமான ஆடி அமாவாசை இன்றாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் உள்ள மக்கள் இம்முறை கீரிமலைக்கோ அல்லது சுழிபுரம் திருவடிநிலைக்கோ சென்று கடலில் நீராடி பிதுர்க் கடன் செய்யமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. [அ-28]

## தென்மராட்சி பகுதியில் இரவில் குண்டு வீச்சு!

### மீசாலையில் வீடுகள் சேதம்

தென்மராட்சி, ஆக. 9

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பரவலாக அவ்ரோ விமானம் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியது.

மீசாலை, மிருசுவில் வடக்கு, பளை – வண்ணான் கேணி, புதுக்காடு ஆகிய பகுதிகளில் குண்டுகள் வீசப்பட்டன.

மீசாலை தெற்கில் இரவு 10.45 மணியளவில் இடம்பெற்ற அவ்ரோ விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் இருவர் படுகாயம் அடைந்தனர். சில வீடுகள் சேதமடைந்தன.

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீட்டின் மேல் குண்டு வீழ்ந்து வெடித்ததால் வீடு முற்றாகச் சேதமடைந்

(3ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம், கட்டுவனில் 3 பொதுமக்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஆக. 9

மாவிட்டபுரம், கட்டுவன் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று காலை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மாவிட்டபுரம், கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் மூவர் காயமடைந்தனர்.

மாவிட்டபுரத்தில் அளவெட்டியைச் சேர்ந்த நடராசர் தவராசா (வயது 28) என்பவரும், கட்டுவனில் உரும்பராயைச் சேர்ந்த முருகேசு ஈசன் (வயது 24) என்பவரும் குப்பிளானில் அதே பகுதியைச் சேர்ந்த கந்தன் அரியகுட்டி (வயது 48) என்பவரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15)

## அரச படைக்கு எவ்விதத்திலும் சளைத்தவர் அல்லர் புலிகள்!

### ஆனையிறவுச் சண்டை குறித்து ரோய்ட்டர் கணிப்பீடு

கொழும்பு, ஆக. 9

ஆனையிறவு சண்டையை வெறுமனே பார்க்கும்போது அரசாங்கப் படையினருக்கு அது வெற்றியாகத் தெரிந்த போதிலும் அரசாங்கப் படையினருக்கு எந்த விதத்திலும் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பதையும், அரசாங்கப் படைகளை பல விதத்திலும் சம பலத்துடன் எதிர்கொள்ளக் கூடியவர்கள் என்பதையும் புலிகள் நிரூபித்துள்ளனர்.

மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் மேற்கண்டவாறு கூறினார் என்று ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

தமது சகாக்களை இராணுவத்தினர் மீட்டுவிடுவாரென்பதில் சந்தேகமில்லாத போதிலும் எவ்வளவு காலம் இதற்கு பிடிக்கும் என்பதே [illegible]யாக இருந்தது.

சுமார் எண்ணாயிரம் எண்ணிக்கை வரையிலான படையினருடன் பல வசதியீனங்களுக்கு மத்தியில் போராடுவதில் தமது பலத்தினை புலிகள் நிரூபிக்க முடிந்துள்ளது.

'ஆட்டிலறி ஷெல்' முகாமுக்குள் இருப்பது புலிகளுக்குத் தெரிந்திருக்குமாகையால் இவ்வாயுதங்களை அவர்கள் [illegible] கச் செய்திருக்கும்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவுக்கு தெற்கே நேற்றுக் கடும் சண்டை

யாழ்ப்பாணம், ஆக. 9

ஆனையிறவு முகாமில் இருந்து படையினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் பரந்தன் பக்கமாக முன்னேற முயன்றபோது, கடும்மோதல் மூண்டது:

விமானத் தாக்குதலின் உதவியுடன் படையினர் கடும் ஷெல் வீச்சுக்களை நடத்திக் கொண்டு முன்னேற முனைந்தனர்.

அப்போது விடுதலைப் புலி

[ 3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இலங்கை வேதாகம சங்கத்திலிருந்து பெறப்பட்ட விளக்கக் குறிப்பு வேதாகமங்கள், மலிவுப் பதிப்பு வேதாகமங்கள், ஆலய பாவனைக்கான வேதாகமங்கள், சிறுவர் நூல்கள் விற்பனைக்கு உண்டு. சி. எல். எஸ். புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [4021]

### விற்பனைக்கு வர்த்தகமும் நிதியும்

உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், வர்த்தகம், வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் போன்ற பகுதிகள் அடங்கியது. தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன், B. Com [Hons] MBA, கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. [சி-0279]

### தேவை

நாட்டுத் தேக்கு விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0334]

### போத்தல்கள் தேவை

ஜாம்போத்தல்கள், சோஸ் போத்தல்கள் (Jam Bottles, Sauce Bottles) ரூபா /3-இற்கு குறையாமல் கொள்வனவு செய்யப்படும். Tasteline Industries (pvt.) Ltd., 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4227)

### மணப்பெண் தேவை

இந்து 37 வயது, லக்கினத்தில் செவ்வாய் தோஷம் இல்லை. வியாபாரத்தை தொழிலாகக் கொண்டவருக்கும், 35 வயது குற்றம் இல்லாத ஜாதகம். ஐரோப்பிய நாடொன்றில் உத்தியோகம் பார்க்கும், விரைவில் நாடு திரும்பவுள்ளவருக்கும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண்கள் தேவை. தொடர்பு: வி. இல. 338, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17725]

### புலமைப்பரிசில் ஆண்டு - 5

மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமான பயிற்சி பரீட்சை தமிழ், கணித பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிறுவனம் 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4228]

### பயிற்சி மதிப்பீடு

O/L 90 91 விஞ்ஞானம், கணிதம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I & II வினாத்தாள்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படும். விடையளித்து தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். Bond புத்தக நிலையம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4229]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவர். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [4818]

---

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

### விதை நெல் / பாவனைக்குரிய நெல் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் தனது கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் (இராமநாதன் விவசாயப்பண்ணை) உற்பத்தி செய்த பின்வருவனவற்றை விற்பனை செய்வதற்காக கேள்விப்பத்திரங்களை கோருகின்றது.

1. விதை நெல் — இனம் BG — 350
   BW — 351
2. பாவனைக்குரிய நெல் — மேற்படி இனங்கள்

விதை நெல் விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படும்.

கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிப்போர் பின்வரும் விவரங்களை குறிப்பிடல் வேண்டும்.

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றுக்கு செலுத்த விரும்பும் விலை
4. விதை நெல்/பாவனைக்குரிய நெல் என்பதை குறிப்பிடவும்.

விற்பனை விலை, விற்பனை செய்யக்கூடிய அளவு ஆகியவை பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப்பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையினரால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும் / நிராகரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்துக்கு உரியது.

யாழ். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

கேள்விப்பத்திரங்கள் 1991-08-17ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நெல் விற்பனைக்கான கேள்விப் பத்திரம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1991-08-17ஆம் திகதி பிற்பகல் 2-30மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

[சி-0332] — பதிவாளர்

---

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் க. இரவீந்திரன்

[ஆசிரியர், யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயம்]

தோற்றம்: 24 7-1947 மறைவு. 20-08-1990

திதி: 9-8-1991

உடுக்கை இழந்தவன் கைபோல - ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

நட்பிற்கு இலக்கணமாய் வாழ்ந்த நண்பன் ரவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

-நண்பர்கள்.

யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்.

[4236]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் க. இராசையா J. P.

[ஓய்வுபெற்ற அதிபர்]



தோற்றம்:
25-07-1924

மறைவு:
21-07-1990

திதி:
09-08-1991

உங்கள் நினைவு என்றும் எம் உள்ளத்தில் நிலைத்திருக்கும்!

மனைவி, மகள்.

'இந்திரபதி', வளலாய். ([illegible])

---

## கண்ணீர் அஞ்சலி

27-07-1991 அன்று ஆனையிறவில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த தையிட்டி காங்கேசன்துறையைச் சேர்ந்த

வீரவேங்கை

### ● அல்பேட் (பாபு) ●

நடராசா கலைச்செல்வன் அவர்களுக்கு

எமது கண்ணீர் அஞ்சலி.

- நண்பர்கள்.

தையிட்டி. (17761)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 24 — 07 — 1947



அரக்கர் பிடியில்: 20 — 08 — 1990

அமரர்

### கந்தையா இரவீந்திரன்- வேலணை

(ஆசிரியர், யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்)

திதி: 9-8-1991

எம் நெஞ்சம் நிறைந்த சுந்தர செல்வமே!
அன்பின் திருவுருவே பண்பின் சிகரமே!!
கண்ணின் மணியே உயிருக்குயிரே!!!

நின் ஆத்ம சாந்திக்காக நிதமும் இறைவன் கழலிறைஞ்சுகிறோம்.


மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
வட்டுக்கோட்டை மேற்கு, உறவினர், நண்பர்கள்.
வட்டுக்கோட்டை.

1ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு,
வேலணை.

[4235]

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### மாணிக்கம் நவரத்தினசிங்கம்

பிறப்பு: 18-05-1940 இறப்பு: 25-07-1987

திதி: 09-08-1991

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, மக்கள்.

"நவஜோதி வாசம்"
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. (4230)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தளரும் தடை!

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளை நேற்று முதல் நீக்கிக்கொள்வதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

அரசாங்கத்தின் இந்தத் திடீர் முடிவு தமிழ் மக்கள் அனுபவித்த உணவுத் தட்டுப்பாட்டையும், அதிக விலைப் பளுவையும் ஓரளவு நீக்கும்.

எனினும் அரசின் முடிவு எவ்வாறு சீராக அமுல் செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்தே உரிய பலன் வந்தடையும்.

எதற்கும் தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை— உணவுத் தடை — சம்பந்தப்பட்ட பின்னணியை ஆராய்வது பொருத்தமானதாகும்.

தமிழ்ப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு கட்டுப்பாடு (நடைமுறையில் அது தடை) விதிக்கப்பட்டது பிரசித்தப்படுத்தி—பிரகடனப் படுத்திச்—செய்யப்பட்ட ஒன்றல்ல. யுத்தத்தை அரசாங்கம் வெட்டவெளிச்சமாகப் பிரகடனப்படுத்தியது. ஆனால் பொருளாதாரத் தடை ''நசுக்கிடாமல்'' நடைமுறைப் படுத்தப்பட்டது.

வடக்கைப் பொறுத்தளவில் வவுனியாவுக்கு இந்தப் பக்கமாக உணவு மற்றும் பாவனைப் பொருள்களை கொண்டு வருவதை இராணுவத்தினர் தடுத்து வந்தனர். தடை செய்யப்பட்ட பொருள்களின் விவரம் பத்திரிகைகளுக்குக் கூட அறிவிக்கப்படவில்லை. பெற்றோல், டீசல் உட்பட முப்பது பொருள்கள் தடைசெய்யப்பட்டனவாகப் பட்டியல் போடப்பட்டு வவுனியா தடைமுகாமில் தொங்கவிடப்பட்டிருந்தது.

அவற்றில் அடங்காத பல பொருள்களை — தேங்காய் எண்ணெய் முதல் சவர்க்காரம் வரை, சீனி முதல் தேயிலை வரை— படையினர் தாம் நினைத்த நினைத்தவாறு, தாம் நினைத்த நினைத்த வேளைகளில், தங்கள் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்பக் கண்டபடி தடை செய்து வந்தனர்.

தடை விவகாரத்தில் பாதுகாப்புப் படையினருக்கு ஏகபோக அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததால் அவர்கள் லஞ்சம் வாங்கிக்கொண்டு தடை செய்யப்பட்ட பொருள்களையும் அனுமதித்தது உண்டு!

அதன் விளைவாக ஜனாதிபதி தமிழ்ப் பகுதிகளுக்கு உணவு மற்றும் பாவனைப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கும் அதிகாரத்தை புனர்வாழ்வு அமைச்சுக்கு கடந்த வாரம் மாற்றியிருந்தார்.

அதன் மூலம் தமிழ்ப் பகுதிகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்ததை ஊர்ஜிதம் செய்தார். இப்போது தடை நீக்கப்பட்டதாக அறிவித்ததன் மூலம் இதுவரை தடை விதிக்கப்பட்டிருந்தது மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது!

உணவுப் பொருள் தடையை (கட்டுப்பாடுகளை) அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் அமுல் செய்வதற்கு அரசு உத்தேசித்தது. ஆனால் திடீரென அந்த முடிவை மாற்றித் தடையைத்தளர்த்தி இருப்பது ஆச்சரியத்தைத் தருவதாகவே உள்ளது.

இந்த ஆச்சரியமான முடிவு அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் அணுகுமுறை மாற்றத்தின் பிரதிபலனோ என்று கூடச் சிலர் ஐயுறலாம்.

ஆனால், பொருளாதாரத் தடையை பகிரங்கமாக விதிக்கும் போது தமிழர்கள் வேறு நாட்டு மக்களாகக் கணிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அது குறித்து வெளி உலகம் வேறு விதமாகக் கருதும் என்ற அச்சத்தினாலேயே அரசு இந்தத் திடீர் முடிவுக்கு வந்திருக்க வேண்டும் என்று கருத இடம் உண்டு.

# ஈழ அகதிகள் விவகாரம்; விரைவில் முடிவு தெரியும்

## ராஜ்ய சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 9

இந்தியாவில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளை அவர்களின் தாயகத்திற்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்திய, ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் விரைவில் முடிவு செய்யவுள்ளன.

இத்தகவலை மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் கடந்த புதன்கிழமை இந்திய ராஜ்ய சபையில் தெரிவித்தார்.

ஈழ அகதிகள் தாயகம் திரும்பும் பிரச்சினையை இரு நாடுகளின் அதிகாரிகளும் ஆராய்ந்து வருகின்றனர் என்றும்—

இதுதொடர்பாக ஸ்ரீலங்கா அரசு கோரியுள்ள விவரங்களை புதுடில்லி அரசு விரைவில் அனுப்பி வைக்கும் என்றும் இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் சொன்னார்.

# புலிகளின் நடவடிக்கை கவலை அளிக்கிறதாம்

## லோகசபையில் நேற்று தெரிவிப்பு

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகள் கவலையளிப்பதாக இருக்கிறது என்று மத்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்திருக்கிறார்.

எழுத்து மூலமான கேள்வி ஒன்றுக்கு லோக சபையில் இணையமைச்சர் நேற்று பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் களைவதற்கு தமிழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தமது பதிலில் குறிப்பிட்டிருக்கிறார். (ஓ-எ)

# புலிகளிடம் கைக்குண்டு தயாரிக்கும் இயந்திரம்!

## 'இந்து' பத்திரிகை தகவல்

கைக்குண்டுகள் தயாரிக்கும் மூன்று இயந்திரங்கள் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் தமிழ்நாடு பொலீஸார் ரகு, விக்கி என்ற இரு சந்தேக நபர்களைக் கைது செய்தனர் என்றும் இவர்கள் கொடுத்த தகவல்களைக் கொண்டு பொலீஸாரினால் கோயம்புத்தூரில் இயங்கி வந்ததாகக் கூறப்படும் புலிகளின் தகவல் தொடர்பு மையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் நேற்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்தன. [இ-10]

# தரம் - 3 அதிபர்களாக நியமனம் பெற்ற 28 பேர்

யாழ். மாவட்டத்தில் 28 பேர் தரம் — 3 அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

ஏ. அரவிந்தநாதன் [யாழ். இந்து], ஏ. ராஜேந்திரன் [கரவெட்டி ஞானாசிரியர்], எஸ். நற்குணலிங்கம் [கரணவாய் ம. வி.], ப. சிவசிதம்பரம் [ஹாட்லி], ஏ. பாலகிருஷ்ணன் [காரைநகர் தியாகராசா வி.], எஸ். வல்லிபுரம் [கரவெட்டி ஞானாசிரியர்],

எஸ். மாணிக்கவாசகர் [இடைக்காடு ம. வி.], திருமதி எம். வேதநாதன் [கொக்குவில் இந்து ஆரம்ப வி.], கே. சந்திரசேகரம் [அராலி இந்து], எம். ஜெயகுமார் [அராலி இந்து], வி. ஏரம்பமூர்த்தி [அச்செழு சிவப்பிரகாச வி.], டி. தேவராஜா [கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி], திருமதி ஆர். மாணிக்கம் [அச்சுவேலி சரஸ்வதி], கே. சுந்தரலிங்கம் [சுதுமலை வடக்கு ரி. எம். வி.], எஸ். பொன்னம்பலம் [வலந்தலை வடக்கு ஏ. எம். ரி. எம்.],

ஆர். சிவபாலசேகரம் [கொக்குவில் இந்து], எஸ். சிவகுமாரன் [குப்பிளான் விக்கினேஸ்வரா], ரி. ராஜேந்திரம் [ஆழியவளை சி. சி. ரி. எம். வி.], ஜே. ஜேசுதாசன் [சென். றோக் யாழ்.], எம். செல்லையா [சென். மேரிஸ் யாழ்.], பி. ஞானசேகரலிங்கம் [ஏழாலை தெற்கு ஏ. எம். ரி. எம்.], திருமதி கே. சுப்பிரமணியம் [நடேஸ்வரா கனிஷ்ட], எஸ். சிவானந்தராசா [இணுவில் சைவப்பிரகாச வி.], எஸ். விநாயகமூர்த்தி [நீர்வேலி சி. சி. ரி. எம். எஸ்.], திருமதி என். எச். வில்லியம்ஸ் [நல்லூர் சென். பெனடிக்ஸ்], கே. ஜெயானந்தன் [கோண்டாவில் இந்து], கே. செல்வகுமாரன் [இராமநாதன் கல்லூரி, மருதனார் மடம்], செல்வி எம். சின்னையா [ஸ்ரான்லி]. [இ-3]

## அரச படைக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் காரணத்தினாலேயே முகாமுக்குள் அகப்பட்டுக் கொண்ட சகாக்களை மீட்பதற்கும், முகாம் புலிகளின் கைக்குள் சிக்கி விடுவதை தடுப்பதற்குமாக மேலதிக படைப்பிரிவினர் பயன்படுத்தப்பட்டனர்.

புலிகளுக்கு படையினரிலும் பார்க்க சில அனுகூலங்கள் இருந்துள்ளன. அவர்களுக்கு மணல் தரையும், முட்புதர்கள் அடர்ந்த காடுகளும் பரிச்சயமிக்கவை.

புலிகளின் முற்றுகையை இராணுவத்தினரால் முறியடிக்க முடிந்துள்ளதற்கான காரணம், அவர்களது படைப் பெருக்கமும், சக்திவாய்ந்த ஆயுதங்களும், வசதிகளும் ஆகும்.

இப்படி மேலும் சில அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர் என்று ரோய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. [இ-3]

## தென்மராட்சி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தது.

வீட்டிலிருந்த இருபது பேர் பதுங்கு குழிக்கு அருகில் படுத்திருந்தால் உயிர் தப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்திரமணி பாக்கியநாதன் (வயது 34) தலையில் காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எம். குமாரசிங்கம் (வயது 60) சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மிருசுவில் வடக்குப் பகுதியில் [illegible] காத நிலையில் மீட்கப்பட்டது. (ஓ-117)

# ஈரானின் முன்னாள் பிரதமர் பாரிஸில் குத்திக்கொலை!

ஈரானின் முன்னாள் பிரதமர் ஷகூர் பக்தியார் பிரெஞ்சு தலைநகர் பாரிஸில் உள்ள அவரின் வீட்டின் முன்னால் வைத்து இனந்தெரியாதோரால் குத்திக்கொலை செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவரது உதவியாளரும் அச்சம்பவத்தின்போது கொலையுண்டார்.

1979 இல் ஆயதுல்லா கொமேனி தலைமையிலான இஸ்லாமியப் புரட்சி இடம் பெற்றபோது பக்தியார் ஈரானை விட்டு தப்பி ஓடி பிரான்ஸில் அடைக்கலம் புகுந்தார்.

கொமேனியின் கொள்கைகளை பக்தியார் பலமாகக் கண்டித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)

# இந்தியா - சோவியத் யூனியன் பாதுகாப்பு உடன்படிக்கை மேலும் 20 ஆண்டுகளுக்கு!

புதுடில்லி, ஆக. 9

இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான பாதுகாப்பு உடன்படிக்கை மேலும் 20 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீடிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்திருப்பதாக புதுடில்லியிலும் மாஸ்கோவிலும் சமகாலத்தில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை 9-8-1971 இல் முதன் முதலாகக் கைச்சாத்திடப்பட்டது. (ஒ-எ)

## உணவுப்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கும் பொருள்களின் பட்டியல் ஒன்றை பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் வர்த்தமானியில் வெளியிடுவார். அவ்வாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருள்களை வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு எடுத்துச் செல்வதற்கு மட்டுமே அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அனுமதி முன்கூட்டியேபெறப்பட வேண்டும்.

இதற்கான ''பெர்மிட்'' வழங்கும் அதிகாரம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திடமே இனி இருக்கும்.

கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருள்களைத் தவிர, ஏனைய பொருள்களை தனி நபர்கள், வர்த்தகர்கள், அமைப்புகள் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் ''பெர்மிட்'' இன்றி லொறிகளில் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு எடுத்துச் செல்ல முடியும்.

### அரச அதிபரின் அத்தாட்சி தேவை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களுக்கு இரண்டாவது தடவையாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல விரும்புவோர், முதல் தடவை எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருள்களை, குறிப்பிட்ட மாவட்டத்திற்கு,குறிப்பிட்ட லொறியில் கொண்டுபோய்ச் சேர்த்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்தை அந்த மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுக்கப்பட்டுள்ள பாதைகளால் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு, அப்பாதைகளை உபயோகப் படுத்துவதற்குத் தேவையான ''பெர்மிட்''டை அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் இருந்து பெற வேண்டும்.

இதேவேளை—

போதுமான உணவுப் பொருள்களை வடமாகாணத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பும் தனிநபர்கள், பொது ஸ்தாபனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் யாழ்ப்பாணம் — கண்டி நெடுஞ்சாலையை பாவிப்பதை பாதுகாப்பு அமைச்சு வரவேற்பதாகவும்—

இந்த நெடுஞ்சாலையைப் பாவிப்பது போக்குவரத்து தூரத்தை குறைக்க உதவும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் — கண்டி நெடுஞ்சாலையைப் பாவிக்கும் போது ஆனையிறவு தடை முகாம் அருகால் செல்லவேண்டியிருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால் உணவுப் பொருள்களை ஏற்றி வடபகுதிக்கு கொண்டு செல்வதற்கு வேறு பிரதான பாதையை உபயோகிப்பது குறித்து தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (அ-எ)

## மக்கள் அஞ்சலி

முல்லைத்தீவு நகரப் பகுதியில் கடந்த செவ்வாயன்று இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தின்போது வீரமரணமடைந்த வேங்கைகளின் புகழுடல்கள் நேற்று முன்தினம் முள்ளியவளையில் அமைந்துள்ள மாவீரர் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றினர். (ஓ-5)

## வீடு பார்க்க...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கீழே விழுந்து, வீதியால் கொஞ்சத் தூரம் உருண்டு, பற்றைக்காடடுக்குள் இறங்கி ஓடித்தப்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

தமக்கு முன்னால் வீடு பார்க்கச் சென்ற சுமார் 20 பேருக்கு என்ன நடந்தது. என்று தெரியவில்லை என்றும்—

அவர்கள் படையினரிடம் சிக்கியிருக்கலாம் என்றும் அந்த இளைஞர் தெரிவித்தார்.

இவர் தற்சமயம் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [உ-15]

## ஆனையிறவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நடத்திய கடும் எதிர்த் தாக்குதலை அடுத்து படையினர் பின்வாங்கினர். புலிகளின் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தமுயற்சி கைகூடாததை அடுத்து படையினர் கிழக்குப் பக்கமாக--தட்டுவன்கொட்டி ஊடாக முன்னேற முயன்றனர். அப்போது கடும்சண்டை மூண்டது.

இந்தச் சண்டையில் படையினருக்கு உயிரிழப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கலாம் என்றும், ஏராளமானோர் காயமடைந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

இறந்த சிலரையும் காயம் அடைந்த சிப்பாய்களையும் கைவிட்டுவிட்டு படையினர் பின்வாங்கிச் சென்றனர் என்று கூறப்பட்டது.

இவர்களை மீட்டெடுக்க சுமார் 300 வரையிலான படையினர் மீண்டும் முன்னேறி வந்த சமயம்,பெரும் மோதல் வெடித்தது.

நேற்று மாலை வெடித்த இந்த மோதல் நேற்று இரவு வரை தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 படையினர் பலி! 29 பேர் படுகாயம்!!

கொழும்பு, ஆக. 9

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்தனர். மேலும் 29 பேர் படுகாயமடைந்தனர் என்று நேற்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனையிறவு முகாமைச் சுற்றி படையினர் நான்கு திசைகளிலும் முன்னேறியுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நடராசா M.Sc. [Birmingham]

விழிசிட்டி தெல்லிப்பளையைச் சேர்ந்த முருகேசு நடராசா 6-8-91 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் அசலவத்தை இறப்பர் ஆராய்ச்சி நிலைய முன்னாள் ஆய்வாளரும் தற்போது C. W. MACKIE நிறுவனத்தின் ஆலோசகரும், காலஞ்சென்றவர்களான சி. முருகேசு [C.C.S] - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், வசந்தாவின் அன்புக் கணவரும், வியாபாரிமூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜெயதேவர் [தபாலதிபர்] - திருமதி ஜெயதேவர் அவர்களின் மருமகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் [சிறாப்பர், மத்திய வங்கி] மகேசன் [ஓய்வுபெற்ற தபாலதிபர்], தடாதகைப்பிராட்டியார் [ஆசிரியை, இந்து மகா வித்தியாலயம் மாத்தளை] ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவராணி [கனடா], பரஞ்சோதி அம்மா [ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை], Dr. வி. கனகரத்தினம் [வத்துகாமம்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-8-91 புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை அறியத் தருகிறேன்.

தகவல்:
மு. மகேசன்

86/2, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.
(17474]

### கந்தையா தங்கராசா

[4ஆம் வாய்க்கால், கிளிநொச்சி]

சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கிளிநொச்சி பட்டின சபை முன்னாள் ஊழியருமாகிய கந்தையா தங்கராசா அவர்கள் 8-8-91 அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் திருமதி நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி சகுந்தலாதேவி, சறோஜாதேவி, செல்வன் தர்மராசா [சவூதி], சிவாநந்தன் [சவூதி], செல்வி பாலசரஸ்வதி, விஜயலட்சுமி, கலைவாணி, ஜெயவாணி, செல்வன் ஜெய்சங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம், தர்மதேவா [C. T. B. கிளி. சாலை] ஆகியோரின் மாமனாரும், ஷர்மிலா, கமிலா, தேவரஞ்சன் ஆகியோரின் பேரனும், முருகையா, காலஞ்சென்ற திருமதி புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சக்திவேல்பிள்ளை, பொன்பாக்கியம், தர்மலிங்கம், ராஜலட்சுமி, பத்மநாதன், யோகநாதன் ஆகியோரின் சகோதரனும், திருமதி கந்தசாமி நவமணியின் மருமகனும், சத்தியநாதன், சத்தியகலா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-8-91 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

4ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி. (17475)

தகவல்:
த. நாகேஸ்வரி குடும்பத்தினர்

### முருகேசு நல்லதம்பி

(சமாதான நீதவான், இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகர் பலகாட்டிலும் பின் வாரிவளவிலும் வசித்த முருகேசு நல்லதம்பி (சமாதான நீதவானும், இளைப்பாறிய ஆசிரியரும்) காரைநகரில் 06-08-91 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், பரமசிவம் (லண்டன்), மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செ. சுரேந்திரன் (அஞ்சல் அதிபர், அட்டாளைச்சேனை), சிவகாமசுந்தரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாலன் (லண்டன்), சாந்தினி சிவபாலன் (லண்டன்), சுகுமாரன், அமரகுமாரன், ஏ. சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனாரும், மு. வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அரச கணக்காளர்) அவர்களின் அன்புத் தமயனாரும் பேராசிரியர், கலாநிதி இ. கனகசுந்தரம் [சிங்கப்பூர்] அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்று பிற்பகல் காரைநகரிலேயே நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எல்லோருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மு. வேலுப்பிள்ளை
(தம்பி)

கம்பனை அம்மன் வீதி,
சுழிபுரம்.
[4237]

## தீர்த்தம்

காங்கேசன்துறை, ஆகஸ்ட் 9

பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய ஆடி அமாவாசைத் தீர்த்தம் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இராணுவ நடவடிக்கையால் உற்சவம் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை அடுத்து மாவைக் கந்தன் சக்திவேல், துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டு கடந்த 24 நாட்களும் விசேட பூசைகள் நடைபெற்று வந்தன.

நேற்று தேர் உற்சவம் நடைபெற்றது. வழமைபோல் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள் அன்னதானம் வழங்கினர்.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி 1990/91

ஐந்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமும், ஆண்டு 9 (தரம் 8) கல்வித் தகைமையும் கொண்ட அரசாங்க/அரச கூட்டுத்தாபன / தனியார் நிறுவனங்களில் அல்லது சுய தொழில் [விவசாயம், மீன்பிடி மற்றும் குடிசைக் கைத்தொழில் உட்பட] ஈடுபட்டுள்ள தொழிலாளருக்கான தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறிக்கு அனுமதி பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவத்தையும் மேலதிக விவரங்களையும், பல்கலைக்கழக சிறாப்பரின் கருமபீடத்தில் ரூபா 15/- செலுத்திப் பெறறுக் கொண்ட பற்றுச்சீட்டினை நேரில் சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 15/-க்கான காசுக் கட்டளையுடன் சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ. மீ. x 10 செ. மீ. அளவினதான கடித மேல் உறையுடன் பிரதிப் பதிவாளர் /தேர்வுகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்பதற்கான கடைசித் திகதி 30-08-1991.

பாட நெறியில் பங்குபற்றுவோர், எழுத்துத் தேர்வு ஒன்றுக்கூடாகவும், நேர்முகத் தேர்வு ஒன்றுக்கூடாகவும் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்துத் தேர்வு 06 - 10 - 1991 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு நடைபெறும்.

குறிப்பு:

பத்து வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவம் உடையவர்களிடம் இருந்து ஆண்டு 9 இலும் குறைவான கல்வித் தகைமையுடனும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்
[கி-0336]

## பொன்னாலையில் ஷெல்!

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை முதல் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் பொன்னாலை தெற்கில் சில வீடுகள் சேதமடைந்தன.

வரதராஜப்பெருமாள் ஆலயத்தின் பின்பக்க வெளிக்காணியில் விழுந்த ஒரு ஷெல் வெடிக்காத நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-15-28)

## போராளிகள் ஊடுருவலைத் தடுக்க
## 2 ஆயிரம் பொலிஸாருடன் தமிழகத்தில் தனிப் படை!

சென்னை, ஆக. 9

ஈழப் போராளிகளின் ஊடுருவலைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக 2 ஆயிரம் பொலிஸார் கொண்ட தனிப்படை ஒன்றை அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இப்பொலிஸார் 40 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிந்து தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளில் செயற்படுவர் என்றும் —

பிரதமர் நரசிம்மராவின் அங்கீகாரம் பெற்ற பின்னர் தமிழக அரசு இத்திட்டத்தை அமுல் நடத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-எ)

## அதிபர்கள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஆக. 9

தரம் 1 பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை யாழ். கல்வி அலுவலக முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொத்தணி அதிபர்கள் அல்லாத—தரம் 1 பாடசாலையை சேர்ந்த — அதிபர்களும் கடமை புரியும் ஏனைய அதிபர்களும் மேற்படி பயிற்சி நெறிக்குத் தகுதி உடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## அமைச்சருக்கு ஒரு ரூபா சம்பளம்!

புதுடில்லி, ஆக. 9

இந்திய மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோஹன் சிங் தாம் மாதம் ஒரு ரூபா மட்டுமே சம்பளமாகப் பெறப் போவதாக அறிவித்திருக்கிறார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக தாம் முழுச் சம்பளம் பெறுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பதாகவும் டாக்டர் சிங் தெரிவித்திருக்கிறார். (ஒ-எ)

## கண்ணீர் அஞ்சலி

### தவரத்தினம் வெஸ்லி தவேந்திரன்

(குட்டி) - (கர்ணன்)

(பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி மாணவன்)

வீர ஜனனம்: 24 - 11 - 1971
வீர மரணம்: 29 - 07 - 1991

தாயக மீட்புக்காய் எதிரிப்படையோடு கட்டைக்காட்டில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட மண்ணின் மைந்தன் கர்ணனுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரின் மரணச் சடங்கில் நேரில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உரிய உதவிகள் செய்த உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"சத்திய புரி"
1 ஆம் கட்டை,
பருத்தித்துறை.

-குடும்பத்தினர்.
(17760)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் கனகம்மா

மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி கனகம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மனைவியும், சண்முகராசா, சரோஜா, சந்திரதேவா, சத்தியநேசன், சத்தியபாலன், சந்திரசேகர் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று நண்பகல் 2 மணிக்கு மல்லாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சண்முகஜோதி
மில்லேன்,
மல்லாகம். [17476]

தகவல்:
சண்முகராசா
(மகன்)

### திருமதி கந்தையா பொன்னம்மா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், 253/3, முரசுமோட்டையில் வசித்து வந்தவரும், இறுதியாக யாழ். றக்கா வீதியில் தங்கியிருந்தவருமான திருமதி கந்தையா பொன்னம்மா நேற்றிரவு காலமாகிவிட்டார்.

இவரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
என். எஸ். கே. இலட்சுமணன் ஜே. பி.
(மகன்)

31, றக்கா வீதி
யாழ்ப்பாணம்.
(17477)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [...] இல் உள்ள அச்சகத்தில் 09 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org